Downloaded from:-www.paritchai.com


# அறிவுத்தாரகை 2020

5

சுட்டெண் : ..........................................

போட்டி – 01

நேரம் : 15 நிமிடம்

01. ஒரு பண்ணையில் உள்ள பசுக்களினது கால்களினதும் வால்களினதும் மொத்த எண்ணிக்கை 60 எனின், அங்குள்ள பசுக்கள் எத்தனை?
(1) 10 (2) 11 (3) 12

02. ஒரு மரத்தில் இருந்த கிளிகளின் தலைகள் 10 எனின், அவற்றின் கால்களினதும் அலகுகளினதும் மொத்த எண்ணிக்கை எத்தனை?
(1) 10 (2) 20 (3) 30

03. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்பட்டன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 32 ஆகும். தலைகளின் எண்ணிக்கை 10 ஆகும். அவ்வாறெனில்,
(i) அங்குள்ள ஆடுகள் எத்தனை?
(1) 6 (2) 5 (3) 4
(ii) அங்குள்ள கோழிகள் எத்தனை?
(1) 6 (2) 5 (3) 4

04. ஒரு வாகன பழுது பார்க்கும் தொழிற்சாலை ஒன்றில் உள்ள கார்களினதும் மோட்டார் சைக்கிள்களினதும் மொத்த எண்ணிக்கை 17 ஆகும். அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 54 ஆகும். எனின்,
(i) அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்கள் எத்தனை?
(1) 7 (2) 10 (3) 17
(ii) அங்குள்ள கோழிகள் எத்தனை?
(1) 7 (2) 10 (3) 17

05. ஓர் ஆட்டுக்கு மூன்று கால்கள் எனின் 3 ஆட்டுக்கு எத்தனை கால்கள் உண்டு?
(1) 9 (2) 11 (3) 12

06. ஒரு யானைக்கு ஒரு தந்தம் எனின் 4 யானைக்கு எத்தனை தந்தங்கள் உண்டு?
(1) 4 (2) 7 (3) 8

A.M.SANOOS

Downloaded from:-www.paritchai.com


07. ஒரு மைதானத்தில் 11 கம்பங்கள் காணப்பட்டன. சில கம்பங்களில் இரண்டு கொடிகள் வீதமும் வேறு சில கம்பங்களில் மூன்று கொடி வீதமும் ஏற்றப்பட்டிருந்தன. ஏற்றப்பட்ட மொத்தக் கொடிகளின் எண்ணிக்கை 27 ஆகும்.

(i) இரண்டு கொடிகள் ஏற்றப்பட்ட கம்பங்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

(ii) மூன்று கொடிகள் ஏற்றப்பட்ட கம்பங்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

08. ஒரு தோட்டத்தில் 3 இதழ் பூக்களும் 4 இதழ் பூக்களுமாக மொத்தம் 13 பூக்கள் உள்ளன. அவற்றின் இதழ்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆகும். எனின்,

(i) அங்குள்ள 4 இதழ் பூக்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

(ii) அங்குள்ள 3 இதழ் பூக்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

09. கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மொத்த மாம்பழங்களின் எண்ணிக்கை 18 ஆகும். சின்ன மாம்பழம் ஒன்று ரூ. 3 வீதமும், பெரிய மாம்பழம் ஒன்று ரூ. 5 வீதமும் மொத்தமாக ரூ. 68 இற்கு பழங்கள் வாங்கினேன்.

(i) நான் வாங்கிய சின்ன மாம்பழங்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 11

(ii) நான் வாங்கிய பெரிய மாம்பழங்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 11

10. ஒரு மாணவன் ஓர் அட்டையில் கோடுகள் வரைந்து முக்கோணிகளையும், ஐங்கோணிகளையும் வெட்டினான். அவன் வெட்டிய மொத்த தளவடிவங்கள் 15 ஆகும். அவனால் வரையப்பட்ட கோடுகளின் மொத்த எண்ணிக்கை 57 ஆகும்.

(i) அவன் வெட்டிய முக்கோணிகள் எத்தனை?

(1) 6 (2) 8 (3) 9

(ii) அவன் வெட்டிய ஐங்கோணிகள் எத்தனை?

(1) 6 (2) 8 (3) 9

- *** -

A.M.SANOOS